விலை ரூபா 4-00

# ..ழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

..32 தை 19 றஜப் 15 இதழ்: 281
..ப்பாணம் வெள்ளிக்கிழமை 1-2-1991

புதுக்குடியிருப்பில்

## கடும் விமானத் தாக்குதல் 20 பேர்பலி; 50பேர் காயம்

[யாழ்ப்பாணம்]

முல்லை. மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு சந்தையில் நேற்றுமுன்தினம் மாலை நடத்தப்பட்ட விமானத்தாக்குதலில் 20 போதுமக்கள் உடல் சிதறிப் பலியானார்கள். 12 பேர் படுகாயமடைந்தனர், 25 வர்த்தக நிறுவனங்கள் சேதமடைந்தன.

இப்பகுதியைதிடீரெனசுற்றி வட்டமிட்ட சிறிலங்கா விமானப்படையின் 3 பொம்மர்கள் (4-ம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படையால் 4 பேர் சுட்டுக்கொலை

(மட்டுநகர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள விநாயகபுரத்தில் அதிரடிப்படையினரால் நான்கு பொது மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

அம்பாறை – விநாயகபுரம் (4-ம் பக்கம் பார்க்க)

## ..பஸ்கள், ரயில்களுக்கு தீவைப்பு!

# ..மிழ்நாட்டில் பல இடங்களில் ..வன்செயல்கள் வெடித்தன!

## ஆயிரம் பேர் கைது!

[சென்னை]

..மிழ்நாடு தி. மு. க. அரசு மத்திய அரசினால் கலைக்கப்பட்டதையடுத்து ..நேற்று தமிழ்நாட்டில் பலஇடங்களில் வன்செயல்கள் வெடித்தன. .. ரயில்கள் மற்றும் அரச வாகனங்கள் எரிக்கப்பட்டதுடன் ..வீச்சுக்கள், பொலிஸார்மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டது. ..செயல்களில் ஈடுபட்டோரில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ..துசெய்யப்பட்டனர்.

..மு. க. அரசு கலைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரி.. ..நேற்று சென்னையில் நடைபெற்ற கண்ட..த்தில் முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி, முன் ..அமைச்சர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் ..கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### ..நிதி கண்டனம்

..மு. க. அரசினை பதவி நீக்கம் செய்தன்மூலம் பிரத.. ..சேகர் ஜனநாயக நெறிமுறைகளை தவறவிட்டு.. என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கண்ட..வித்தார்.

..நேற்று முன்தினம் நள்ளிரவு மாநில அரசை கலைக்கும் ..யின் உத்தரவு அறிவிக்கப்பட்ட பின்னர் 14 பரா.. (4ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகர் மத்தியில் ஹெலி தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் மத்தியில் நேற்றுமாலை 6 மணியளவில் ஹெலியிலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

மேற்படி துப்பாக்கி வேட்டுகளினால், யாழ் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் உள்ள இரு வீடுகள் சிறு சேதமடைந்தன. [4ம் பக்கம் பார்க்க]

## கொழும்பிலுள்ள இயக்கங்கள் மத்தியில் கருத்து வேறுபாடு

(கொழும்பு)

கொழும்பில் தங்கியுள்ள தமிழ் அமைப்புகளிடையே கருத்து மோதல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை பிரச்சனையில் இந்தியத் தலையீடு அதிகரிக்க எல். எவ்.வும் ஈ. பி ஆர். எல். எவ்.வும், ஈ. என். டி. வலியுறுத்தி வேண்டுமென வருகின்றன. [4-ம் பக்கம் பார்க்க]

..லுவலகங்களிலும்

## ..லற்ற நிர்வாகத்தை நிறுவ ..னைவரும் முன்வாருங்கள்!

### ..தலைப் புலிகள் மக்கள் முன்னணி

(..ணம்) ..களில் கடந்த காலங்களில் முறைகேடுகள் தமிழீழ மண்..ல். கூட்டுத்தாபன பல்வேறு வகையான மோசடி ..ணில் மேற்கொள்ளப்பட்டி..ளார் நிறுவனங்கள், ஊழல்கள், அதிகார (3-ம் பக்கம் பார்க்க)

கூட்டுறவு சங்கங்கள்

## அனுராதபுரத்தில் இனிமேல் அனுமதி பெறவேண்டும்

[வவுனியா]

வவுனியா நகரிலிருந்து முல்லைத்தீவு கிளிநொச்சி, மன்னார், ஆகிய இடங்களுக்கு கூட்டுறவு சங்க லொறிகளில் உணவுப் பொருட்களை அனுப்ப இனி மேல் அனுராதபுரம் இராணுவ இணைப்பதிகாரியிடமிருந்தே அனுமதி பெறவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் வவுனியா நகர கொமாண்டரிடமிருந்து அனுமதி பெறப்பட்டுவந்தது. தனியார் வர்த்தகர்கள் கொழும்பில் கூட்டுப்படைக்கான தலைமை அலுவலகத்தி.. (4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

கழுவித் துப்பரவு செய்யப்பட்ட முழு/அரைப்போத்தல்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம். (எ- 1072)

## போட்டோ ஸ்ரறற்

நல்லூரில் தரமான, தெளிவான போட்டோ ஸ்ரற் பிரதிகளுக்கும், கறுப்பு வெள்ளை புகைப்படங்களுக்கும் நாடுங்கள். சித்ராலயா, 351, கோவில் வீதி, நல்லூர். (கோவில் பின் வீதியில், கம்பன் கோட்டம் முன்பாக) (ஏ-1060)

## பரீட்சை (ஆண்டு 5)

10-2-91 ஞாயிறு நடைபெறவிருந்த மாதிரி அனுமதிப் பரீட்சை 4-2-91 திங்கள் மு. ப. 8-00, மு: ப: 1-00 மணி நேரங்களில் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். பி. ப: 1-00 மணிக்கு ஆனைக்கோட்டை - குளப்பிட்டி வீதி (மக்கள் வைத்தியசாலை முன்பாக) நடைபெறும். பதிவு செய்யவும்: புலமைப்பரிசில் மாணவரும் தோற்றலாம். (சி 4307)

## "பரிசு தரும் அக்கினி"

இனவிடுதலையை மையமாக எழுதப்பட்ட நாவல். பத்து வாசகர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 400/- ரூபா பெறுமதியான புத்தகங்களையும் அன்பளிப்பாக வழங்குகின்றது. விற்பனையாகின்றது. துர்க்காஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி. ஸ்ரீ காந் புத்தகசாலை நல்லூர். (சி-4299)

## பாலாஜி புத்தகசாலை

ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் பாடசாலை புத்தக உபகரணங்கள் ராணி முத்து. ராணி காமிக்ஸ், நிதானமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். 15/6, முதலாம்ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், ரதி ஸ்ரோர்ஸ், மெயின் வீதி, பருத்தித்துறை. (சி-4301)

## பழைய புத்தகங்கள்

பழைய புத்தகங்கள், கொப்பி, பத்திரிகை கோழித்தீன், சீமெந்துறை, உரப்பை, பித்தளை, செம்பு வாங்கப்படும். விற்கப்படும் சேனாதிராசா Second Hand Book House 57, ஸ்ரான்லி வீதி, முரசொலி, இலங்கை வங்கிக்கு முன்லேன் யாழ்ப்பாணம். (சி-4287)

## தரன் ஸ்ருடியோ

றபர்சீல், கலர் கறுப்பு வெள்ளை படங்கள், பாஸ்போட், அடையாள அட்டை, 12''x10'' படங்கள் பிளாஸ்ரிக்போட், விளம்பரபோட் மற்றும் ஓவிய வேலைகள். 24, யாழ் வீதி, (ரெட்ணவீதி) யாழ்ப்பாணம். (சி-4302)

## தேவை

ஆங்கில மருந்து வியாபாரத்தில் அனுபவமுள்ள பெண் லிகிதர் தேவை. 6-2-91 காலை 9-00 மணிக்கு நேரில் வரவும். ''வெஸ்கோ' (O. P. D.க்குமுன்பாக) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 4308)

## மணமகன் தேவை

யாழ்ப்பாண 'இந்துசமயத்தைச் சேர்ந்த யாழ். நகரில் ஆசிரியையாக கடமையாற்றும் 28 வயதுடைய ஆசிரியைக்கு அரசாங்கத்தில் பணிபுரியும் மணமகன் தேவை. விண்ணப்பிக்கவும், விளம்பர இல: 4303, C/o ஈழநாடு லிமிப், யாழ்ப்பாணம். (சி-4303)

## விற்பனைக்கு

வேப்பெண்ணெய் வீட்டில் விளக்கெரிக்கக் கண்ணுக்குக் குளிர்ச்சி- மருந்தாகப் பாவிக்க. போத்தல் ரூ. 80-/- மட்டுமே. திருநெல்வேலி, இணுவில், யாழ் நவீனசந்தை அண்ணாகோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற். (எ- 1071)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## விசேட அறிவித்தல்

### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழா

1991-01-18ஆம் திகதி காலை நிகழ்ச்சியுடன் ஒத்திவைக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா, கலாசார நிகழ்ச்சிகள் 1991-02-01 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு மீண்டும் ஆரம்பமாகி 1991-02-02, 03 ஆம் திகதிகளில் மாலை 6-00 மணிவரை தொடர்ந்து நடைபெறும்.

சுந்தரம் டிவகலாலா
சே. சிவராஜா
இணைச்செயலர்

ஆ. இராஜகோபால்
செயலர்
கலாசாரக் குழு

க. சி. குகதாசன்
தலைவர்
நூற்றாண்டு விழாச் சபை (எ-1070)

## புதிய அதிபர்

(வடமராட்சி)

கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியின் புதிய அதிபராக இ. விஜயரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார். [51]

## பிரதேச சபை உப-அலுவலகம் இடமாற்றம்

(அச்சுவேலி)

வலிகிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உபஅலுவலகம் ஆவரங்கால் சந்திக்கு அருகில் உள்ள தனியார் இல்லம் ஒன்றில் செயற்பட்டு வருகின்றது. (78)

## வவுனியா அரச அதிபர்

[ஒட்டுசுட்டான்]

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக திரு: த. மார்க்கண்டு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ்ப்பாண வைத்தீஸ்வர வித்தியாலய பழைய மாணவராவார் (144)

## சைக்கிள் திருட்டு

(கோண்டாவில்)

கோண்டாவில் மேற்கில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலின்போது அவ்விடத்தில் மூன்று சைக்கிள் திருடப்பட்டுள்ளன.

நல்லூர்ப் பகுதியில் மட்டும் இம்மாதத்தில் 15க்கு மேற்பட்ட சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளது. [ச]

## எட்டு மணி நேர வேலை

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாண சுகாதார திணைக்களத்திலும் மற்றும்இப் பிராந்தியத்திலுள்ள அரசாங்க வைத்திய சாலைகளிலும் கடமையாற்றிவரும் சிற்றூழியர்களும் எட்டுமணித்தியால வேலைஒழுங்குத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

## விபத்தில் மாணவன் காயம்

(நல்லூர்)

மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தொன்று யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்றது.

யாழ். இந்துக் கல்லூரி மாணவன் ஆர். இராசசேகரன் (வயது 12) காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (152)

## நியமனம்

(உடுவில்)

மருதனாமடம் கோட்டக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றிய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரன் இளைப்பாறியதைத் தொடர்ந்து, சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் உதவிக் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய திரு. எஸ் தனஞ்செயன் மருதனார் மடம் கோட்டத்துக்கு உதவிக் கல்விப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (109)

## இராசிபலன்

01-02-1991
வெள்ளிக்கிழமை

மேடம்: கருத்து முரண்பாடு, அந்நியர் தொல்லை, ஏமாற்றம்.

இடபம்- பயனற்றசெயல், தொழில்பாதிப்பு, புதிய பிரச்சனை, செலவு.

மிதுனம்: காரியபலிதம், குடும்பத்தில் சுபகாரியம், தொழில்லாபம்.

கடகம்: கண்ணில்ரோகம், அலைச்சல், குடும்ப கஷ்டம், தொல்லை மிகுதி.

சிங்கம்: வேண்டாத உறவு, குடும்ப சுகம், பொதுத்துறை ஈடுபாடு.

கன்னி: அதிகயோசனை, தனித்திருத்தல், தொழில் சிக்கல், அவமதிப்பு.

துலாம்: கற்பனைமிகுதி, அதிகாரிகள் சினம், கடிதஉறவு, பாசமிகுதி.

விருச்சிகம்: தொழில் நஷ்டம், வீட்டில் துன்பம், வைத்திய செலவு.

தனுசு: வீண்பழி கேட்டல், கருத்துமோதல், உடல் சோர்வு, மனச்சுமை.

மகரம்: உடல் உபாதை, குடும்பகஷ்டம், புத்திரர் கவலை, அலைச்சல்.

கும்பம்: மன நிறைவு, தொழில் பாராட்டு, காரிய வெற்றி, சுபச்செலவு.

மீனம்: புதிய சிந்தனை, வாழ்க்கைச்சுகம், தொழில் சிறப்பு, தானதர்மம்.

'ஜோஸ்யர்'

## வீரமரணம்

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் வெளியேற முற்பட்ட இராணுவத்தினருடன் இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த நான்கு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

நிசாந்தன் (கந்தசாமி உதய குமார், புத்தூர்), கிருபா (சோமசுந்தரம் காண்டீபன் நாவற்குழி), விஜேந்த் (மாணிக்கராசா-முரளி நாகர்கோயில்) திலீபன் (கந்தசாமி யோகநாதன், கொடிகாமம்) ஆகியோரே இச்சம்பவத்தில் வீரமரணமடைந்தார்.

இவர்களுக்கு புலிகள் வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர். (வி)

0 0 0

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரத்தில் நேற்று இடம்பெற்ற இராணுவத்துடனான நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த வகிப்டன் (கணேசபிள்ளை அருணசேகரன, கோண்டாவில்) வீரமரணமடைந்தார்.

இவருக்கு புலிகள் வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (வி)

0 0 0

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த குறிஞ்சா என்னும் இடத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்குமிடையே நேற்றுமுன்தினம் பகல் 11-30 மணிக்கு கடும்மோதல் இடம்பெற்றது.

இம்மோதலின்போது நாவற்குடாவைச் சேர்ந்த வீரவேங்கை மயூரன் வீரமரணமடைந்தார். (வி)

## ராணுவம்மீது புலிகள் தாக்குதல்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு வவுணதீவு இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் வெளியேற முற்பட்ட இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப்புலிகள் கடும் கிளைமர் தாக்குதலைமேற்கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவம் இழப்புகளுடன் முகாம் திரும்பியுள்ளது. (க-வி)

## ஆண்டு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வசந்தம் சிறுவர்பாடசாலையின் ஆண்டு விழா உடுவில் கல்லூரி ஆசிரியர் திரு. வி. விக்னேஸ்வரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

## சகல அலுவலகங்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பதை அவதானிக்க முடிகிறது. இந்த நிர்வாகச் சீர்கேடுகளில் ஈடுபட்டிருந்த சிலர் எங்களால் விசாரிக்கப்பட்டு நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இன்னும் சிலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிறுவனங்களில் நிகழ்ந்த அனைத்துக் குறைபாடுகளும் ஊழல்களும் வெளிக்கொணரப்பட்டு விட்டதென்று கருதுவதற்கில்லை. இவை நிகழ்ந்து கொண்டிருக்கும் ஊழல்களில் ஒரு பகுதியாகும்.

இவ்வாறு விடுதலை புலிகள் மக்கள் முன்னணி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்:

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினால் எழுந்துள்ள நிலைமையைப் பயன்படுத்தி மக்களை அளப்பரிய இன்னல்களுக்கு ஆளாக்கி அதனை இலாபமடையும் சில அலுவலர்களையும், அரசவங்கி, கூட்டுத்தாபன, கூட்டுறவு, தனியார் நிறுவனங்களில் காண முடிகிறது. விடுதலைப் போராட்ட வளர்ச்சியில் சமகாலத்தில் எம்மக்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்ட எல்லோரையும் இனம் காட்டுதல் போராட்ட வளர்ச்சிக்கும் மக்களுக்கும் ஆற்ற வேண்டிய பணியாகும். இந்த வரலாற்றுத் தேவையினை விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியினர் செய்தாக வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டுள்ளார்கள்.

இம்மாதம் 15-ம் திகதி வெள்ளிக்கிழமைக்குப் பின்னர் இத்தகைய மக்கள் விரோதச் செயல்களைச் செய்வோர் எம்மால் இனம் காணப்பட்டு நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படுவர். இந்த நிறுவனங்களில் பணியாற்றுவோர் தமது நிறுவனங்களில் இடம் பெறும் மோசடிகள், ஊழல்கள், அதிகார முறைகேடுகள் போன்றவற்றைத் தெரியப்படுத்துவராயின் அவர்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதற்குரிய எல்லா ஏற்பாடுகளும் எம்மால் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பாக எங்கள் பிரதேசக் காரியாலயங்களில் ஊழல் தடுப்புச் செயற்பாட்டிற்கான ஒரு பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

எங்காவது ஊழல், மோசடிகள் அதிகார முறைகேடுகள் நடைபெறுவதை பொது மக்கள் ஆதார பூர்வமாக இப்பிரிவினருக்கு அறியத்தரும் பட்சத்தில் எம்மால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம். [வி]

## இன்று

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞானிகளின் நியதிகள் விதிமுறைகள் உருவாக்குதல் பற்றிய கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பௌதீகவியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## போதிய தமிழ் பொலிசார் இல்லை

(கொழும்பு)

தென்பகுதிப் பொலிஸ் நிலையங்களில் போதிய தமிழ் பொலிசார் இல்லாததினால் தமிழில் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படுவதில்லை என கொழும்பு விவேகானந்தா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய சிரேஷ்ட பொலிஸ் அதிபர் திரு. சமரசேகர கூறினார்.

கருத்தரங்கில், மாணவன் ஒருவர் தென்பகுதியில் பொலிஸ் வாக்குமூலங்கள் தமிழில் ஏன் பதிவு செய்யப்படுவதில்லை என்று கேட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

## தமிழ்மொழி தினப் போட்டி நடத்த ஏற்பாடு

(உடுவில்)

1991ம் ஆண்டு பாடசாலை மட்டம், கோட்டமட்டம், மாகாணமட்டம் ஆகிய நிலைகளில் தமிழ்மொழித்தின போட்டிகளை நடாத்தி அகில இலங்கை ரீதியில் பரிசுகளை வழங்க கல்வி அமைச்சின் தமிழ்மொழிப்பிரிவு தீர்மானித்துள்ளது.

இதன் தீர்மானத்துக்கமைய பாடசாலை மட்டத்திலான தமிழ்தின போட்டிகள் பெப்ரவரி மாதம் 10-ம் திகதிக்கு முன்னதாகவும், கோட்டமட்டத்திலான போட்டிகள் பெப்ரவரி 25-ம் திகதிக்கு முன்னதாகவும், மாகாண மட்டத்திலான போட்டிகள் மார்ச் 14-ம் திகதிக்கு முன்னதாகவும் நடத்தப்பட வேண்டும் எனவும் அகில இலங்கை ரீதியிலான போட்டிகள் மே மாதம் 8-ம் திகதி கொழும்பில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாசிப்பு, எழுத்து, கட்டுரை, ஆக்கம், பேச்சு, பாஓதுதல், இசை, நடனம், நாடகம் ஆகிய விடயங்களில் நான்கு பிரிவுகளாக போட்டிகள் நடைபெறும்.

ஆண்டு 4, 5 முதலாம் பிரிவாகவும், ஆண்டு 6, 7, 8 இரண்டாம் பிரிவாகவும், ஆண்டு 9, 10, 11 மூன்றும் பிரிவாகவும், ஆண்டு 12, 13 நான்காம் பிரிவாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. (100)

## "தாக்குதல் மூலம் வடக்கில் 23 இராணுவ முகாம்களை ஏழாகக் குறைத்திருக்கின்றோம்" - ஆஞ்சநேயர்

(கொக்குவில்)

வடக்கில் 23 இராணுவ முகாம்கள் இருந்தன. இந்த இராணுவ முகாம்கள் மீது நாங்கள் தாக்குதலை நடாத்தி ஏழாகக் குறைத்துள்ளோம். மக்கள் நிம்மதியுடன் வாழ வேண்டுமென்று நாம் புனித போராட்டம் நடத்திவருகின்றோம்.

தாவடி ஸ்ரீ காளியம்மாள் சனசமூக நிலைய முன்றலில் நடந்த விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கருத்தரங்கில் பேசிய யாழ் மாவட்ட பிரசார பிரிவு பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

நாம் ஒரேயொரு துப்பாக்கியுடன் ஆரம்பித்து இன்று பல முகாம்களை அடித்துநொருக்கி பல ஆயுதங்களைப் பறித்தெடுத்து, நவீன ஆயுதங்களுடன் நின்று போராடும் நிலைக்கு வளர்ந்துள்ளோம். அது மட்டுமல்ல படை பலத்தாலும், வீரத்தாலும் வளர்ந்துள்ளோம். எமது இயக்கம் உலகிலேயே உயர்ந்த இனத்தையும், வீரத்தையும் கொண்டதாகும்.

இன்று சிங்கள இனவாதம், இராணுவம், முஸ்லிம் கூலிப்படை, இனத்தைக் காட்டிக் கொடுக்கும் கும்பல்கள் ஒரு புறமும், புனித போரை நடத்தும் புலிகளும் மக்களும் மறுபுறமுமாக கயிறு இழுப்புப் போட்டி நடைபெறுகிறது. இந்த தர்மத்திற்காகப் போராடி இழுக்கும் கயிறை அறுத்தால் தமிழ்ஈழம் பிறக்கும். நமக்கு நிம்மதிவரும்.

மொசாட் போன்ற நாசகாரிகளின் ஒத்துழைப்பையும் முறியடித்து பல முகாம்களை அழித்து ஆயுதங்களைக் கைப்பற்றினோம். ஆகவே நீங்கள் தினமும் எங்களுடன் இணைந்து கொண்டால் வெகுவிரைவில் லட்சியத்தை அடையலாம். ஆகவே எந்தவொரு வகையிலாவது மண்ணைக்காக்க முன்வாரீர். தமிழன் உயிர், உடமைக்கு இன்று உத்தரவாதம் இல்லை. அனைவரும் போராளியாக மாறினால் நிச்சயம் பரிகாரமடையலாம் என்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர் திரு செல்வம் பேசும்போது; சிங்களப்படையினால், இராணுவத்தால், முஸ்லிம் காடையர்களால், தமிழ் தேசவிரோத கும்பல்களினால் தமிழ் இனத்தவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆகவே நாம் கட்டாயம் ஆயுதம் தூக்கினால்தான் மரண தண்டனைகளை சவால்களை வெல்லமுடியும்.

எமது இனத்தை, மொழியை மண்ணைக் காப்பதற்கு அனைவரும் எம்முடன் இணைந்து போராடினால் தமிழனுக்கு விதித்த மரண தண்டனையை முறியடித்து சமதர்மதமிழீழம் காண்போம் என்றார்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி சபீனா பேசுகையில்;

அரசு மக்களை அழிக்கவே போர் தொடுக்கின்றது. இப்போராட்டம் 1972ம் ஆண்டு தொடங்கப்பட்டு எத்தனையோ உயிர்த்தியாகங்கள் ரத்தக்களரிகள் மத்தியில் வளர்ந்து வந்துள்ளது. ஆகவே இப்போரில் வேறு அரசோ, நாடோ உதவும் என்று இருக்காமல் நாமே போராடி நமது சுதந்திரத்தைப் பெற வேண்டும் என்றார். (135)

## சிறுமியை கடத்த முயற்சி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தை செம்மணி வீதியில் நேற்றுக்காலை பரிகாகிகோபுபாலர் பாடசாலையில் நேற்றுக்காலை 5 வயதுச்சிறுமியை ஒருபெண் தனது சொந்தப் பிள்ளை என்றுகூறி கடத்திச் செல்ல முயற்சித்த சம்பவம் அங்குநின்ற பாடசாலை ஆசிரியைகளினால் முறியடிக்கப்பட்டது.

நல்லூரைச்சேர்ந்த ஐந்து வயதான குலேந்திரன் கிரிஷாலினி என்ற இச்சிறுமி பின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார். [ஈ]

## க. பொ. த. (உயர்தர) பரீட்சை விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

1991ஆம் ஆண்டு க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்கு பரீட்சை ஆணையாளர் விண்ணப்பங்களை கோரியுள்ளார்.

பாடசாலை அதிபர்களும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 5ந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அவர் அறிவித்திருக்கிறார். (மா)

## ஸ்தாபகர்நினைவுதினம்

(அச்சுவேலி)

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் ஸ்தாபகர் சேர் காடினர் சிற்றம்பலத்தின் நினைவுதினம் கல்லூரியில் கொண்டாடப்பட்டது.

## யாழ். இந்து என்றொரு தேன் சிந்து

இங்கு மாணவர் குலம் உதித்தது!
ஈழம் எங்குமே கிளை விரித்தது!
பொங்கு நோய்கள் வெம் பிணி தணித்தது!
போர்க் களத்திலும் அணி வகுத்தது!
தங்கு தடையிலாத் தமிழ் செழித்தது!
தரணியெங்குமே கலை சிரித்தது!
எங்குமேயிவர் புகழ் நிலைத்தது!
எங்களன்னையின் சுகம் தழைத்தது!

★ ★ ★

வித்தை மலிந்ததும், வித்தை குவிந்ததும்
''இந்து''விடந்தானே!-உயர்
சிந்தை பிறந்ததும், சிக்க லவிந்ததும்
''இந்து''விடந் தானே!-நம்
தந்தை நிகர்த்தவர் அன்று தவழ்ந்ததும்
''இந்து''விடந்தானே!-பல
முந்தை நறுங்கலை மோதி எழுந்ததும்
''இந்து''விடந்தானே!-இதை
வந்தனே! வந்தனே! என்றுதினம் யான்
நின்று வணங்கேனே!-இதை
வந்தே பாரீர்! வந்தே பாரீர்!
என்று முழங்கேனே!!

--ஜெ. கி. ஜெயசீலன்

(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் நூற்றுண்டு விழாவையொட்டி இக்கவிதை வெளியிடப்படுகிறது.)

### பஸ்கள் ரயில்கள்

(1ம் பக்க தொடர்ச்சி)

படைப்பிரிவு உடனடியாக தமிழ்நாட்டிற்கு அனுப்பப்பட்டது.

பல இடங்களில் வன்முறையில் ஈடுபட்டோர் மீது தடியடி, துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டதில் பலர் படுகாயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கான எதிர்ப்பாளர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## எதிர்க்கட்சிகள் கண்டனம்

தமிழ்நாடு அரசு கலைக்கப்பட்டதற்கு மத்திய அரசுக்கு ஆதரவளிக்கும் கட்சிகள் இதனைப் பாராட்டியும், எதிர்கட்சிகள் அனைத்தும் பலத்த கண்டனம் செய்துமுள்ளன.

குறிப்பாக காங்கிரஸ், ஜனதா தள் (எஸ்) அ. தி. மு. க. இதனை வெகுவாக வரவேற்றுள்ளன. ஜனதா தள், பாரதீய ஜனதா, தி. மு. க. பாட்டாளி மக்கள் கட்சி, தெலுங்கு தேசம், கம்யூனிஸ்ட் கட்சிகள் அஸாம் கணபரிஷத் உட்பட பல எதிர்க்கட்சிகள் பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளன. தி. க. செயலாளர் திரு. கி. வீரமணி, தமிழ்நாடு ஜனதா தள் தலைவர் சிவாஜிகணேசன் மற்றும் கட்சிகள் கண்டனம் தெரிவித்தள்ளன.

## ராஜீவ் பாராட்டு

வாழப்பாடி இராமமூர்த்தி, செல்வி ஜெயலலிதா, மூன்னாள் அமைச்சர் திரு. சிதம்பரம், காங்கிரஸ் தலைவர் திரு ராஜீவ் காந்திக்குவிடுத்த தனித்தனி அறிக்கைகளில் இதனை பாராட்டியுள்ளதுடன், காலம் தாமதித்து மேற்கொள்ளப்பட்ட சரியானதொரு நடவடிக்கையெனவும் கூறியுள்ளனர்.

## ஜனநாயகப் படுகொலை

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஓர் அரசை ராஜீவினதும், ஜெயலலிதாவினதும், நெருக்கடியால் பிரதமர் சந்திரசேகர் கலைக்க சிபாரிசுசெய்து தமது கைப்பொம்மை அரசை நிரூபித்துவிட்டாரெனவும், இது ஓர் ஜனநாயகப் படுகொலை என்றும், சந்திரசேகர் பதவியேற்றபோதே காங்கிரஸும், அ. தி. மு க.வும் அரசு கலைப்பிற்கான நிபந்தனையுடனேயே ஆதரவளித்ததாகவும், புலிகளை இதற்கு மத்திய அரசு ஒரு சாட்டாக பயன்படுத்தியதாகவும் எதிர்க்கட்சி தலைவர்கள் பலர் கடும் குற்றம் சாட்டியுள்ளனர்.

## கருணாநிதி - சந்திரசேகர் இடையில் பனிப்போர்

கடந்த சில மாதங்களாக பிரதமருக்கும் முதல்வர் கருணாநிதிக்குமிடையில் புலிகள் நடமாட்டம் தொடர்பாக பெரும் பனிப்போரே நடந்துவந்தது. ஒரு கட்டத்தில் முதல்வர் தனக்கு கட்டளையிடுவதை உடனடியாக நிறுத்தவேண்டுமென்றும் பிரதமர் எச்சரித்திருந்தார்.

## பஸ்களுக்கு தீவைப்பு

வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம், திருச்சி மாவட்டம், தஞ்சாவூர், கோவை ஆகிய இடங்களில் அரசுக்குச் சொந்தமான பல பஸ்வண்டிகள் தீமூட்டி எரிக்கப்பட்டன

பல பகுதிகளிலும் ரெயில் வண்டிகளுக்கும் தீமூட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பலர் காயம்

சென்னை மாவட்டத்திலுள்ள ஆவடியில் பொலிஸார்மீது வன்முறைக்கும்பல் ஒன்று நடத்திய தாக்குதலையடுத்து பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பலர் காயமடைந்தனர்.

## ஆறு மாதத்தில் தேர்தல்

கடந்த 25 மாதங்கள் ஆட்சிசெய்தபின் தமிழ்நாடு அரசுபதவிநீக்கம் செய்யப்பட்டு சட்டசபையும் கலைக்கப்பட்டுள்ளது. புதிய தேர்தல்கள் அடுத்தஆறு மாதங்களுக்குள் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. [சி-ரி-க]

---

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/91,

### கூட்டுறவுச்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லிருந்தே அனுமதி பெற்றுவருகின்றன.

கூட்டுறவுச் சங்க லொறிகளுக்கே அனுராதபுரத்தில் அனுமதிபெற உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வறிவித்தல் காரணமாக வவுனியா தெற்கு ப. நோ. கூ. சங்கத்தினர் திகைப்படைந்துள்ளனர்.

## ஜே. வி. பியினர் 9000 பேர் சிறையில்

(கொழும்பு)

ஜே. வி. பி. சந்தேக நபர்களான 9000 இளைஞர்கள் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன ஹக்மனையில் நடந்த கூட்டத்தில் கூறினார்.

### யாழ். நகர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சேரதீவு இறங்குதுறையில் நேற்று 11 மணியளவில் ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கடுமையான துப்பாக்கிப் பிரயோகத்தில் லொறிகளும் பொருட்களும் சேதமடைந்தன.

இப்பகுதிகளில் நின்ற பிரயாணிகள், பாதுகாப்பான இடங்களில் பதுங்கியதில் காயம் எதுவுமின்றிதப்பினார்கள். (வி)

### புதுக்குடியிருப்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

6 குண்டுகளை வீசி பயங்கரத் தாக்குதலை நடத்தின. இதனால் இச்சந்தியிலும் அதன் சுற்றுப்புறங்களில் நின்ற 20 பொதுமக்கள் ஸ்தலத்திலே பலியானார்கள். பலியானவர்களின் உடல்கள் அடையாளம் காணமுடியாதவாறு உருக்குலைந்து காணப்பட்டன

இச்சம்பவத்தில்படுகாயமடைந்த 12 பேர் நேற்று முன்தினமிரவு யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டிருந்தார்கள். இறந்தவர்களில் புதுக்குடியிருப்பு 4ம் வட்டாரத்தைச்சேர்ந்த கலைச்செல்வனின் சடலம் அடையாளம் காணப்பட்டது.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் விபரம் வருமாறு:

வி. கனகலிங்கம் (வயது 38), கே. புஸ்பானந்தன் (வயது 34), ஐ. விவேகானந்தன் (வயது 18), பீ. ரதீபன் [வயது 10], எஸ். ஜெகநாதன் (வயது 43), கே. தியாகராஜா (வயது 24), எம். தியாகராஜா (வயது 28), எஸ் மயில்வாகனம் (வயது 36), எம். நாகமணி (வயது 56), ஏ. பாஸ்கரன் (வயது 12), பி. நாகநந்தினி (வயது 6), எஸ். குணராஜா (வயது 34) ஆர். செல்லம்மா (வயது 42).

நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு நடைபெற்ற இக்குண்டு வீச்சில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கொடி பறக்கவிடப்பட்ட அகதி முகாம் ஒன்றும் பெரிதும் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

திருமலையில் இருந்து இடம் பெயர்ந்து வந்த அகதிகளே இம்முகாமில் இருந்ததாகவும் இக்குண்டு வீச்சில் கூடுதலாக அகதிகளே கொல்லப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி) (153-152)

# அமெரிக்க நேசப்படைகள் மற்றுமொரு தீவை கைப்பற்றின

[றியாட்]

ஈராக்கின் மற்றொருதீவை நேசப்படைகள் கைப்பற்றியுள்ளன. மக்கள் நடமாட்டமில்லாத இத்தீவிலிருந்த ஈராக் படைகள் வெளியேற்றிவிட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஈராக்கின் 20 டாங்கிகளை அழித்துவிட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈராக்கினால் சவுதி அரேபியாவில் கைப்பற்றிய நகரை மீட்டெடுக்கும் முயற்சியில் நேசப்படைகள் ஈடுபட்டுள்ளன. [பூ]

### அதிரடிப்படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதிரடிப்படையினரால் அண்மையில் சுற்றிவளைக்கப்பட்டது.

இச்சுற்றிவளைப்பின் போது இப்பகுதியிலுள்ள ராஜா, கந்தசாமி, அரசரத்தினம், விஜயன், வடிவேலு ஆகியோரின் வீடுகளில் பெறுமதி வாய்ந்த பொருட்கள் அதிரடிப்படையினரால் கொள்ளையடிக்கப்பட்டது.

சுற்றிவளைப்பினை முடித்துவிட்டு திரும்பிய படையினர் வீதியில் சென்ற நான்கு பொதுமக்களை கைது செய்து தம்முடன் அழைத்துச்சென்று சித்திரவதையின் பின்னர் சுட்டுக்கொன்றார்கள் குமார் (34 வயது) வரதன், ராசா, வடிவேலு ஆகியோரே, இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களாவர். (வி)

### கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியத் தலையீடு இருக்கக்கூடாதென 'புளொட்டும்' ஈ. பி. டி. பி. யும் வற்புறுத்தி வருகின்றதால் இக்கருத்து மோதல் இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

## மன்னாரில் குண்டுவீச்சு

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும்நேற்று காலை பரவலான விமானத் தாக்குதல் நடைபெற்றது.

அடம்பன், பரப்புக்கடந்தான், சுருவில் ஆகிய இடங்களில் இரு குண்டுவீச்சு விமானங்கள் பயங்கர தாக்குதலை நடத்தின.

இத்தாக்குதலினால் பலத்த சேதமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வி)

## சுக்ளா பயணம்

(கொழும்பு)

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. வி. சி. சுக்ளா தனது இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்றுக் காலை பயணமானார்.

## மரண அறிவித்தல்

### இராசையா மேரி மங்களம்

பண்டத்தரிப்பைச்சேர்ந்த காலஞ்சென்ற பீலிக்ஸ் இராசையாவின் அன்பு மனைவி மேரி மங்களம் (31-01-1991) அன்று காலமானார். அன்னார் செல்வரத்தினம் (கனடா), துரைராசா, ஜீவரத்தினம் (கனடா) பிறிஜற் (கனடா), யோகரத்தினம் (கனடா) மரீனு (அமெரிக்கா) பத்மினி ஆகியோரின் அன்புத்தாயாரும், மஞ்சரி, (கனடா) மங்களம், ஜெனேஸ் (கனடா), ஜெகநாதன் (கனடா) பற்றிமா (கனடா) ஞானனந்தன் (அமெரிக்கா), றெஜினோல்ட் இரசாயன கூட்டுத்தாபனம், பரந்தன்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான ஞேசமுத்து. அருட் சகோதரி மேரி கபிரியேல்லா, சரா இம்மானுவேல் ஆகியோரின் அன்புசகோதரியும், பெர்னாண்டோசெல்லத்துரை (இளைப்பாறிய கிராமத்தலைமைக்காரர்) இம்மனுவேல் விக்டோறியா, ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரது பூதவுடல் நல்லடக்கத்திற்காக (02-02-1991) சனிக்கிழமை காலை 8-00 மணிக்கு புனிதஅந்தோனியார்சேமக்காலைக்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- இ. ப. துரைராசா

பட்டியோலை, பண்டத்தரிப்பு. [கி-4309]